**சுருக்கம்**

பணியமைப்பு – நெடுஞ்சாலைத்துறை – கட்டுமானம் (ம) பராமரிப்பு, நபார்டு (ம) கிராமச்சாலைகள், திட்டங்கள் மற்றும் பெருநகரம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பணிகளைப் பகிர்ந்து துறையின் செயல்திறனை மேம்படுத்த ஏதுவாக கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு மற்றும் தரக்கட்டுப்பாடு அலகுகளை மறுபணியமர்வின் மூலம் உருவாக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது – அரசாணையில் விரைவுப் பணக் கொடுப்பாணை (Express Pay Order) மற்றும் பணிப் பேரேட்டு எண் சேர்த்து (Post Sanction Ledger) – திருத்த ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.73**

**நாள் 24.08.2026**
**பராபவ வருடம், ஆவணி – 07,**
**திருவள்ளுவராண்டு – 2057**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.43, நெடுஞ்சாலைகள் (ம) சிறுதுறைமுகங்கள் (எச்.கே.2) துறை, நாள் 13.03.2026.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கடித எண்.1900/நிர்.2(2)/2026, நாள் 19.06.2026.

--------

**ஆணை:**

மேலே இரண்டவதாகப் படிக்கப்பட்ட முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கருத்துருவினை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பின்வருமாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**திருத்தம்**

மேற்படி அரசாணையில், பத்தி 7க்கு பதிலாகப் கீழ்காணும் பத்திகள் சேர்க்கப்படுகிறது;

"7. மறுபணியமர்வின் மூலம் புதிதாக உருவாக்கப்பட்ட நான்கு கட்டுமானம் (ம) பராமரிப்பு அலகுகள் மற்றும் தரக்கட்டுப்பாடு அலகுகளின் பணியாளரமைப்பிற்கான சம்பள செலவினங்களை கீழ்காணும் புதிதாக உருவாக்கப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

Scanned with OKEN Scanner

"3054 – சாலைகளும் பாலங்களும் – 80 – பொது 001 – நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – BH – கட்டுமானம் மற்றும் பராமரிப்பு – மண்டல பணியாளரமைப்பு – 301 – சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம்"
(IFHRMS DPC: 305480001BH30101)

"3054 – சாலைகளும் பாலங்களும் – 03 – மாநில நெடுஞ்சாலைகள் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AA – சென்னை – கன்னியாகுமரி தொழிலக பெருவழி செயல்திட்ட அலகிற்கான பணியாளரமைப்பு – 301 – சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம்"
(IFHRMS DPC: 305403001AA30101)

"3054 – சாலைகளும் பாலங்களும் – 03 – மாநில நெடுஞ்சாலைகள் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AB – சென்னை புறவட்டச் சாலை திட்டத்தின் கீழ் திட்ட செயலாக்க அலகிற்கான பணியாளரமைப்பு 301 – சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம்"
(IFHRMS DPC: 305403001AB30101)

"3054 – சாலைகளும் பாலங்களும் – 03 – மாநில நெடுஞ்சாலைகள் – 001 நெறிப்படுத்துதலும் நிருவாகமும் – மாநிலச் செலவினங்கள் – AC – தனி நில எடுப்பு மற்றும் மேலாண்மை அலகுக்கான பணியாளரமைப்பு 301 – சம்பளங்கள் – 01 அடிப்படைச் சம்பளம்" (IFHRMS DPC: 305403001AC30101)

8. மேலே புதிதாக துவக்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைகள் துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

9. தேவைப்படும் கூடுதல் செலவினத்தினை 2026-2027 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்ககத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டினை எதிர்நோக்கி சம்பள செலவினங்களை மேற்கொள்ள முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைகள் துறை அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2026-2027 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (உ.க.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைகள் துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

10. தமிழ்நாடு கருவூல விதித்தொகுப்பு, தொகுதி 1, கருவூல விதி 17-இன் கீழ் உள்ள அறிவுறுத்தல் எண் 1-க்கான குறிப்பின்படி, சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் (DDOs) சமர்ப்பிக்கப்படும் ஊதியப் பட்டியல்கள் (Pay Bills) மற்றபடி சரியாக இருக்கும் பட்சத்தில், அவற்றை ஏற்று சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள் (PAO) / கருவூல அலுவலர்கள் (TO) / சார்-கருவூல அலுவலர்கள் (STOs) ஊதியம் மற்றும் இதர படிகளை வழங்கும் பொருட்டு அரசு இதன் மூலம் விரைவுப் பணக் கொடுப்பாணைகளை (Express Pay Orders) வழங்குகிறது. சம்பந்தப்பட்ட சம்பளக்

Scanned with OKEN Scanner

கணக்கு அலுவலர்கள் / கருவூல அலுவலர்கள் / சார்-கருவூல அலுவலர்கள், சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும் (DDOs) தேவையான பணம் பெற்று வழங்கும் அலுவலர் குறியீட்டை (D.D.O. Code) ஒதுக்கீடு செய்யவும் மற்றும் தமிழ்நாடு கருவூல விதித்தொகுப்பு எண்.70 புத்தகத்தை வழங்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

11. மேலும், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மறுபணியமர்வு மூலம் உருவாக்கப்பட்ட மண்டல வாரியான பணியிட விவரங்கள் குறித்த ஆணை வெளியிட உரிய கருத்துருவினை அனுப்புமாறு முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

12. இவ்வரசாணை நிதித் துறையின் e-file Note#58 மற்றும் பணிப்பேரேட்டு எண்.202608PSL0157-இல் இசைவு பெற்று கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2026080359 மூலம் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சுன்சோங்கம் ஜடக் சிரு**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை-600 025.
தலைமைப் பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு,
சென்னை மண்டலம், சென்னை - 600 025.
தலைமைப் பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு,
மதுரை மண்டலம், மதுரை - 625 002.
தலைமைப் பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு,
கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் -641 043.
தலைமைப் பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு,
திருச்சி மண்டலம், திருச்சி - 620 020.
மாநில கணக்காயர், சென்னை - 600 009 / 600 018.
சம்பந்தப்பட்ட சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.
மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணிகள் மற்றும் விளையாட்டு மேம்பாடு) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.
நிதித்(உ.க-1 / வ.செ.பொ-2)துறை, சென்னை - 600 009.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை - 600 009.
அனைத்து பிரிவுகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
சென்னை - 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

24/08/2026

**பிரிவு அலுவலர்**

Scanned with OKEN Scanner